உ

வேலுமயிலுந்துணை.

மதுரை இராஜபார்ட்

சபாரஞ்சித

**R. V. சத்திவேலாச்சாரி**

யாரவர்களால் இயற்றிய

குமரக்கடவுள்

# பஜனாமிர்தம்.

முதற் பாகம்.

மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப்

பி. நா. சி. ஏஜண்டு

**மு. கிருஷ்ண பிள்ளை**

அவர்களால் வெளியிடப்பெற்றது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

விலை] 184339 **1922.** [அணா 6.

10 AUG 1922

மதுரை, ஸ்ரீ ஜொண்டா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

அச்சிலிருக்கிறது. எதிர்பாருங்கள்.

கூடிய சீக்கிரம் வெளிவரும்.

கன்னிச்சமீன் சரபம் மகா-ள-ள-ஸ்ரீ

உடுமலை முத்துசாமிக்கவிராயர் அவர்கள்

மாணாக்கர் R. K. பூமிபாலகதாஸ் இயற்றிய

பாசுரசேகர பக்திரஸகீதமெனும் பக்திரஸக்கீர்த்தனங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முதற் பாகம் | .... .... | விலை ரூ. | 0—5—0 |
| இரண்டாம் பாகம் | .... | ,, | 0—5—0 |

ஷெடியார் இயற்றிய அடியிற்கண்ட

13-டிராமா சரித்திரங்கள் நூதன வர்ணமெட்

களால் அமைக்கப்பெற்றவை.

1. சதாரம் சரித்திரம்
2. வள்ளி சரித்திரம்
3. நல்லதங்காள் சரித்திரம்
4. கோவலன் சரித்திரம்
5. லலிதாங்கி சரித்திரம்
6. சாரங்கதரன் சரித்திரம்
7. அல்லி சரித்திரம்
8. பாரிஜாத புஷ்ப ஹரணம்
9. சகுந்தலா சரித்திரம்
10. சத்தியவான் சாவித்திரி
11. ஞானசௌந்திரி சரித்திர
12. தாராசசாங்க சரித்திரம்
13. நள தமயந்தி சரித்திரம்.

மு. கிருஷ்ண பிள்ளை,

பி. நா. சி. ஏஜண்ட்,

புத்தக ஷாப்—மதுரை.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184339
சென்னை-600 008

உ

சுகமயம்

# முகவுரை.

உலகத்தின்கண் சர்வான்மாக்களும் சங்கீத மயத்தின்பாற் ப்ரீதிகொண்டிருக்கின்றன.

உதாரணமாக பசு, மான், சர்ப்பம் முதலியஜெந்துக்களின் சுபாவம் ப்ரத்யக்ஷமே. வெள்ளிமலைப்பெருமானார் இராவணன் செய்த கொடுந்தபசுக்கு வந்திலராயினும் அவன் பாடிய கீதரசத்தினால் பகவான் திருவுளங்குழைந்துருகிக்காக்ஷிக்கெளிதாகி விரும்பிய வனைத்துந்தந்தனர் என்று இராமாயணங்கூறுகின்றது. இதுவன்றிச் சமயாச்சாரியார்களும் பண்கலந்ததமிழ்பாக்களாலேயே ஸ்தோத்திரம்பண்ணி யிகபரசாதனமடைந்திருக்கின்றனர்கள். அங்ஙனமிசைதழுவிய கீர்த்தனைமுதலிய தமிழ்பாடல்கள் முத்தமிழென்ற பாகுபாட்டினுள் இசைத்தமிழென்றுவழங்கி வருவனவாகும். அதுவும் காமரசத்தின்பாற்படாது பக்திரசத்தின்பாற்பொருந்தியதேல் உயர்வாம். நிற்க தற்காலநிலையிற்சிலவித்வான்களால் மனங்கொண்டவாறு தொகுக்கப்பெற்றதும் நவ நவமான பெயர்கள்பொறித்தவைகளுமான சிலபாடல்கள் உலாவித்திரிந்துபயன்பட்டுவருகின்றனவாயினும் அவைகள் அர்த்தஹீனமும் விவகாரமின்மையுமுடைந்தாகி பாடும்பொழுது துதி யென்ற சொல் தூதி யென்றும் வாலை யென்ற சொல் வலை யென்றும் ஆகம மென்ற சொல் அகம மென்றும்பேசிவிடுகின்றன. இவைபோலல்லாது குமர பஜனாமிர்த மென்ற இப்பாடலானது பக்தி, வைராக்கியம், ஆனந்த மென்கிற சத்வகுணங்கள் நிறைந்துள்ளது. ஆன்றோர் ஆக்ஷியின்கண்ணுள்ள கனராகதாளங்களாற்றழுவப்பெற்றிருக்கின்றது அன்றியும் தற்காலத்தின் நாகரீக அழகிய ஹிந்துஸ்தான் வர்னமெட்டுகளுங்கொண்டிருக்கின்றது பாடுவதற்கு யாவருமெளிதில் தெரிந்துகொள்ளும்பொருட்டு நாடகஹறங்கங்களிற் பாடிவருகிற பாடல்களையே வர்ணமெட்டுகளாகக்காட்டப் பெற்றிருக்கின்றது பாடுமிராகதாளங்களினிடங்களுக்குத்தக்கவாறு நன்கு ஓசைதாக்கூடிய

சொற்களும் தக்க அர்த்த புஷ்டியும் சமயோஜித சொல் நயம் பொருள் நயங்களும் உருக்கமும் மலிந்து காணப்பெறுகின்றது இத்தகையமுறையில் வைக்கப்பெற்ற வேறு கீர்த்தனைப்பாடல்களு முண்டு. அவையாவன ப்ரும்ம ஸ்ரீ த்யாகராஜ அய்யரவாள் தெலுங்குக்கீர்த்தனைகளும் ப்ரும்ம ஸ்ரீ முத்தமிழ் சக்ரவர்த்திமாம் பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் கீதாமிர்தசார முதலியனவுமேயாம் அறிஞரால் குறிக்கத்தக்கதே. இவ்விதவிலக்ஷணங்களாலமைவதெவ ர்க்குமரிதெனினும் இப்பாடலின் ஆசிரியரான ப்ரும்மஸ்ரீ இராஜ பார்ட் சபாரஞ்சித R.V. சத்திவேலாச்சாரியார் ஸ்ரீ முருகப்பெரு மானின் கடாக்ஷமகிமையாலும் பற்பலவிடங்களிற் வித்வசிகாம ணிகளாற் பிரபுக்களால் மெடல்தோடா இதனடியிற்காட்டியுள்ள பாமாலைமுதலிய சன்மானங்கள் பெற்றமையானும் இயல் இசை நாடகமென்ற முத்தமிழினும் வல்லராய் உலகப்ரசித்திபெற்றதமது பழக்கமுதிர்ச்சியாலும் தமது உபாசனாமூர்த்தியாகிய குமரக்கடவு ளர்க்கு பஜனாமிர்தாபிஷேகஞ் செய்தானந்தித்தனர் இவ்வபிஷே கப்ரவாகத்தைக்கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலன்களா லும் நுகரும்பாக்யம் படைத்தவர்களே இகத்தும் பரத்தும் இன் பம் படைத்தவர்களாவார்கள்.

## K. Muthuswami Achari.

நாடக மேடைகளில் இவர் பெற்ற வாழ்த்துக் கவிகளுட்சில.

மானகுடி ப்ரும்மஸ்ரீ மு.மு. குப்புஸ்வாமிஉபாத்தியாயர் இயற்றிய

வெண்பா

பாலோ தேனோ கனியோ பாகோ தேவாமுதத்
தாலோ வின்னடைகஞ் செய் தாடினன்—மாலோடு
மின்னமருந் தென்மதுரை மேவுமயப்ரம்மகுல
மன்னு சத்திவேலெனு நாமன்.

## மதுரை முத்தமிழ்ப்பாவலர் ப்ரும்மஸ்ரீ
## K. முத்துஸ்வாமியாச்சாரியாரவர்களியற்றிய
## சாற்றுக்கவிகள்.

திடம்பரவுமிடும்பகிரியிடம்பழகு குகன்பதபூஜிதவைராக்யன்
நடம்பெருகுநாடகரஞ்சித சுமுகசமுகமகா ராஜயோகன்
கடம்பவனமதுரையுளான் சொர்னபாரதிகள்மெச்சுங்கண்யசீடன்
வடம்புனைமால்வில்வக்கண்ணுச்சார்யபுத்ரசிகாமணியாய்வந்தோன்.

ஜெகத்ரசர்மதிக்குமதிமுகத்தன்மகிழெமக்கொருசிநேகவான்றே
வகத்ரசநடத்திறைவர்மகத்வதுவாதசச்செவியால்மடுத்துளங்
கொண்
டுகத்ரசவகைத்தமிழிற்குமரபஜனுமிர்தஞ்செய்துலகோர்க்கீந்தான்
மிகத்ரசபாவுஜித விச்வகுலதிலகசத்திவேற்பூமானே.

இத்தகபஜனுமிர்தங்கண்டுநாரதனின்னிசைக்ஞானந்தோர்
வித்தகயாழுடைத்தனன்மாபாரதமுன்னுள்வரைந்தவிகடகும்ப
மத்தகயமுகப்பெருமான் துதிக்கைக்குமுன்வருவான்மலர்மேல்
வாணி
புத்தகமொன்றுவிரும்பிக்கரமேந்திநிற்பளெனிற்புகல்வதென்னே.

### வெண்பா.

அமரரமுதாவென்றன்பர்துதிக்கச்
சமரசமாச்சத்திவேல்தந்தான்—குமர
பஜனுமிர்தங்கம்பனுருவரையாதாண்பங்
கஜனுமிர்தங்கவாக்கா.

### வெண்பா.

சிங்கத்தின்செய்யமுகம் சிங்கத்தின்பொங்குசிகை
சிங்கத்தின்கர்ச்சனையே தேம்பாடல்—சிங்கநடை
வாய்ச்சாதுரியமகாநிபுணச்சத்திவே
லாச்சாரியர்க்குநிகரார்.

வெண்பா.

செப்பரியராஜஜெயச்சிங்கசத்திவேலரைப்பார்த்
தெப்பெரியராஜர்களுங் ஏக்குற்றார்—இப்பெரிய
கொட்டகையுமானந்தங்கொண்டதிவர்போலெந்த
வட்டகையிலுங்கிடைக்குமா.

திருப்பூவணம்தாலூகா கணக்கன்குடியிலிருக்கும்
வித்வான் K. முத்துஸ்வாமிபிள்ளையவர்களியற்றிய

சாற்றுக்கவிகள்.

பூமாதுமகிழ்துளபப்புயல்வண்ணநெடுமாலும்
புகழ்வெண்கஞ்ச
நாமாதுநடனமிடுநான்மறைதேர்நான்முகனு
நயப்பநன்னீர்க்
காமாதுமணமகன்மேற்குமரபஜனைமிருதங்
கமழச்சொன்னான்
தேமாதம்பிகை மதுரைசத்திவேலுமனோனுங்
திருவின்மிக்கோன்.

இத்தகையதோத்திரங்களனைத்தையுமெங்கண்ணோக்கி
யினிதாராய்ந்து
புத்தமுதத்தினைமருவுஞ்சொன்னயமும்பொருணயமும்
பொலிந்துசாலச்
சுத்தமனத்தொடுகுகனைத்தொழுதருள்பெற்றிடமிகவுஞ்
சுலபமாமென்
றெத்தலத்துளவருமனத்துவகைபெறற்கிதுவழியென்
றெண்ணினேனே.

குகமயம்.

ஸ்ரீகணபதிதுணை.

# குமரக்கடவுள் பஜனாமிர்தம்.

## வெண்பா.

திருப்பரங்குன் றஞ்சோலைசெந்தூர்பழநி
விருப்பேரகங்கிரிகள்வீடாய்—இருப்பவனும்
எம்பிரானிளங்குமார தம்பியார்பதங்கள்பாட
நம்பினேனிதங்கஜானனா.

## தந்திமுக பூஜிதம்.

அங்குஜகணநாதா என்ற மெட்டு.

இராகம்—நாட்டை. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

திருமந்த்ரகணேசா ஜெய ஜெய
சித்தமகத்வபூ ஜா ஜெய ஜெய
வரதவைங்காகெஜவதனவிசேஷா
மதுரிதவித பாஷா ஜெய ஜெய (திரு)

பரையம்பிகை பாலா ஜெய ஜெய
பக்தஜனானு கூலா ஜெய ஜெய
விரியம்புஜபதவிகடசுசீலா
விகிதவல்லபை லோலா ஜெய ஜெய (திரு)

வெங்கடாஜலன்மருகா ஜெய ஜெய
வித்வவிசித்ராருகா ஜெய ஜெய
சங்கடங்களிதவிர்தனியருள்பெருக
ததிமூஷிக வருக ஜெய ஜெய (திரு)

கங்கணங்கவிதா தா ஜெய ஜெய
கர்த்தப்ரீதிப்ரசா தா ஜெய ஜெய
மங்களகுணநயமணிசத்திவேலன்
மகிமைப்ரபல கீதா ஜெய ஜெய (திரு)

---

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.
(அம்பிகாவுன்மகன் யென்றமெட்டு)

தும்பிக்கைசெம்பொற்றுண்மெய் யா
நம்பிக்கைகும்பிட்டேனை யா

தம்பிக்காவர்ரண மாய்
தையல்வள்ளிகாரண மாய்
முன்புற்றுயாரண மாய்
மூவர் தேவர் தேவனேவ லா (தும்)

பாரதமங்நாள்வரைந்தா ய்
பார்வதிசுதா வரந் தா
சூரகுலவேரரிந்தா ய்
ஜோதி நீதி யாதி யேதுதி. (தும்)

வேதமந்த்ரபூஜித னே
வித்வசமயோசித னே
நாதசத்திவேற்கித னே
நாம வாம ஞந மோகமோ. (தும்)

---

## பாரதிவணக்க வெண்பா.

சீதவதனத்தாளே செம்பவளவாயாளே
கீதரசஞானங்கெணிப்பவளே—நீதமிகும்
புத்தமுதாமுத்தமிழைப்புத்தகமாய்வைத்தெழுது
வித்தகியே யென்னாவினில்.

## இதுவுமது.

வெண்டாமரையாளே வீணைக்கரத்தாளே
பண்டேருஞ்செந்தமிழின்பாரதியே—தெண்டிரைசூழ்
பார்க்குட்குமரபஜனாமிர்தம்பகர
வாக்குக்கொடுத்தருளம்மா.

## காவடிச்சிந்து.

இராகம் செஞ்சுருட்டி-தாளம் ரூபகம்.

வனசம்பொங்கும்பரிமள மகரந்தந்தங்கிய திரு
மந்திரவேதபுராணி பொழிகவி
தந்திடுகீதகல்யாணி நித்ய
டங்களஞ்சிறந்திலங்கு கங்கணங்கைதங்குவீணை
வாத்யவினோததிராணி அன்பர்கள்
பாத்யமனோகரவாணி (வன)

கனகந்துன்றுங்குருமணி தனதங்கங்கொண்டாமணி
கம்பநாட்டார்க்கருள்நீயே அடியவ
னும்பறமார்க்கஞ்செய்வாயே தெய்வ
கர்த்தர்சித்தர்வித்தகர்க்குமுத்தமிழ்ப்ரசித்தவைத்த
காரணியேண்தெரியாமயே நிரைபரி
பூரணியேஜெகதாயே (வன)

பகருஞ்சந்தம்பலசொலமிக மிஞ்சுஞ்செஞ்சாணிடு
பாடகவோசையனேகம் ஒலிதரு
நாடகபூஜாபிஷேகம் வித்வ
பண்சுரஞ்செரிந்தவென்ப்ரபந்தமும்புரிந்தவுந்தன்
பக்திதபோபலபாக்யம் மதுரித
சத்திவேல்க்காதாரவாக்யம் (வண)

---

## பாக்யலக்ஷ்மி வணக்கப்பா.

சங்கரிமோரியென்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்—கல்யாணி தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

அம்புஜவாரி யமுதாஞ்சிதே
ஆதாரந்தருவாய் (அ)

சம்ரமப்ரீத சதாயிங்கிதே நிறை
சந்த்ரோதயவதனலங்கிர்தே
கம்பீரஸ்ரீமகாலக்ஷ்மிவந்து
காவா செந்திருவே (அ)

கங்கணசெங்கை நித்யகல்யாணி மலர்க்
கண்ணன்முகுந்தற்குகந்தராணி
சங்கீதசத்திவேல்சந்தானசௌபாக்யந்
தாதா வந்தனமே (அ)

---

## ஆச்சாரிய வணக்கம்.

பாரதியார்ச்சனைபுரிவேள்தென்மொழிக்கும்வடமொழிக்கும்
பாத்ரமீதே
பாரதியார்க்குவருமெனப்பாஸ்கரசேதுபதிமெச்சும்
படிவத்தாலப்
பாரதிபார்வம்படைமிகுமுத்துக்கிருஷ்ணபரமகுரு
பாலன்சொர்ன
பாரதியார்வரந்தருஞ்செம்பதுமதளப்பதமலர்க்குப்
பணிசெய்வேனே.

---

## த்வாதசாந்த மீனும்பிகா துதி.

(பதினுன்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

மலையத்துவஜனுக்கு மகளாகி விளையாடு
மரகத சொரூப மயிலே.
மகிமைபெறு துவாதசாந்தந் தங்கியன்பர்க்கு
மனதறிந்துதவுமமுதே
கலைகற்றவாக்கியே கருணைபொழி நோக்கியே
கடியவினை போக்கியே நின்
கமலபதெரிசனந்தந்தருளுவாயெனிற்
கனதனச் செல்வனுவேன்
நிலைபெற்ற புகழ் சுகுண நிதமுநற்றெனகமகிழு
நெஞ்சத்திருந்து கொஞ்சும்
நீயலாதினி வேறுதாயே தெனக்குண்டு
நிச்சயமறிந்ததிலையா
தலைவைத்த மகுடமணி சாம்பவி கௌமாரிபொற்
றுமரைப்புனலி நீலி
தாஞட்சி பெறமருவு மேஞட்சிகாமதுரை
மீனுட்சி கவுரி உமையே

---

வடவெங்கட என்ற மெட்டு

இராகம் பூரிகல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி

மதுராபுரிப்பதி மேவிய
மகராசி மீனாக்ஷிதேவியே (மதுரா)

அநுபல்லவி

பதுமாசன பாததரிசனப்பாக்யமிந்தாவெனப்
பக்ஷம்வைத்து ரக்ஷித்திட (மதுரா)

சரணம்

மங்காமலைபத்துவஜன் பெற்ற
மாணிக்கமேமுன்னைக்காணக்கண்தேடி
இங்கோடி வந்தங்கமொடுகண்டே
னிச்செகமெச்சுபசுமரக
தச்சொரூபச்சிலைரூபியாய் (மதுரா)

செங்காதரர் தேவசொக்கேசனுக்
கீடாய்த்திருவிளையாடற் புரிந்தாயே
சிங்காதனி பங்கயற்கண்ணியே
சித்தமகத்துவ உத்தமி
சத்திவேல் பக்திசெய் முத்தமிழ் (மது)

---

நெஞ்சே சம்சார மென்ற மெட்டு.
(பஞ்சாட்சர மகத்வம்)

இராகம் பியாக் தாளம் ஆதி

கண்ணிகள்

பஞ்சாக்ஷரத்தியானமே யுயர்
புதவிமெய்ஞ்ஞானமே (பஞ்)

நெஞ்சாரத்துதித்துநிதமுரு ஜெபித்தால்
நியமநிஷ்டைவளரு நிசமிதுலபித்தால்
அஞ்சாதிருக்சலாம துவன்றிவிபத்தால்
அழிவில்லேச்சிவனருளானந்தச்சுபத்தால் (பஞ்)

ஜடவுலகினில் மறுஜனனங்கொடாது
தகுந்தமட்டிலுஞ் செய்ததவத்தைக்கெடாது
மடவியரால் வருமாயை தொடாது
வாக்சேரைத்து மனதை போக்கில்விடாது (பஞ்)

முத்திபெறவிதன்றிமூலிகையேது
முழுமனதொருமையிற்பழுதுவராது
சத்திவேலவனேப்பெற்றவனேயிப்போது
சமயமந்திரம் நமசிவயமென்றேது (பஞ்)

---

(விருத்தம்)

கும்பகுவக்குமருணகிரிக்குங்கீரர்க்குங்
கோயிலிருந்தூறியஞ்செய் கச்சியார்க்கும்
நம்பனடியார்க்கு மவ்வை நனினத்தார்க்கும்
நாவலர்க்கும் பாவலர்க்கும் நாடினேர்க்கும்
அம்பரத்தார் குலிசனுக்குமவன்பாவைக்கும்
அரசநம்பிபுதல்விக்குமமரர்யார்க்கும்
செம்பதுமத்தாளேயருள் முருகன்மந்தரம்
திவ்யசடாக்ஷரத்தை நெஞ்சில்தியானிப்போமே

---

## சடாக்ஷர தியானப்பதம்

இந்துஸ்தான் தோடி தாளம் ரூபகம்

சபாபதிக்கு யென்ற மெட்டு

(பின்மகுட சந்தம்)

### பல்லவி

சடாக்ஷரத்தை ஜெபிக்கத்தெய்வ
சகாயமாகுமே (ச)

### அநுபல்லவி

சாத்மீக சாஸ்த்ரீக சாராம்ஸ சாம்ராஜ்ய (ச)
சஷ்டிமகத்துவவிரதமனுஷ்டிகைபெற்றிடுநிஷ்டையின் (ச)
சர்வாண்டமு நிறைகாரண வுருவாகிய கருணாகரன் (ச)
சரியை கிரியை யோகஞான நெறியைவிரிவிலறிதற்குரிய (ச)

சதங்கையணி பதங்களையுசிதம் பெறவேநிதந் தொழுதிடச்
சமரசநிலைபமரர்கள் துதிவிமரிசைபெறுகுமரகுருபரன் (ச)

சண்டவேகங்கொண்டதோர்சிகண்டிமிசை
கண்டுகொண்டோமண்டர்பணிதண்டபாணியின் (ச)

### சரணம்

கடாக்ஷமாகு மோன சித்தி
காக்ஷியே மேலான முத்தி
திடாக்ஷி மேவு த்யானபத்தி
சீர்த்தி தகுஞ் சத்திவேல்மகிழ்
பூர்த்தி மிகும்முத்தமிழ்ப்புகழ் (ச)

———

முருகன் திரு—என்ற மெட்டு.

இராகம்-அடாணா தாளம்-ரூபகம்.

பல்லவி.

குமரன்மலைக்கோவிலெல்லாமகிமை—கைக்
குக்குடத்துத்துவசக்கடவுள்முத்துக் (கு)

அநுபல்லவி.

அமராவதிக்கானதேவேந்திரன்
அகமிங்கிதமகிழ்பொங்கிடு
குகசங்கித மிகுமங்கள (கு)

சரணம்.

தோத்திரவிண்ணோர்கள்சூரபத்மாவோ
துயர்விளைக்குந்த்ரோகன்—என்று
சொல்லப்பரமசிவன்கட்பொறியிற்
றுலங்குப்ரபைத்ரேகன்
காத்தவரிட்டசரவணஞ்சூழ்தடா
கந்தங்கும்ப்ரவாகன்—திருக்
கார்த்திகைமாதர்கொங்கைப்பால்தரவுண்ட
கங்கைபுத்ரயோகன்
மூர்த்திகரங்களைச்சாம்பவிபார்த்து
மூவிரண்டானமுதலொன்றுசேர்த்து
பூர்த்திமிகுஞ்சண்முகப்பெயரார்த்து
புவனிசத்திவேலைத்தொடு
தவனதுஷ்டசூரரைப்பொரு (கு)

## ஆசிரியவிருத்தம்.

மகிமைமிகுகெந்தமாதனகிரிபமர்ந்திலகு
மதுரிதவிகசிதவசன
மருவுசரவணபவனியெனதுபவமகலவொரு
வகைபுரியயிதுதருணமே
சிகிமிசைவரக்குகக்குடத்துவஜமெழில்தாத்
தெரிவையர்களிருவர்தழுவ
ஜெயஜெயெனவடியவர்கள்பரவிவரஅதிவிதவு
சிதபததெரிசனைதருவாய்
அகிலபுவனசராசரங்களுந்தனதுவிளை
யாட்டல்லவாவல்லவா
அபயகரவரதவுனதுபயதிருவிழிகளினு
மனுவளவுபார்வைபெரிலோ
சகிதகற்பகதருவினிந்த்ராதிபதவியுஞ்
ஜனனசாபல்யமுருவார்
சாலோகநால்முத்திமோலாகவாழ்சத்தி
வேலாயுதக்கடவுளே.

---

ஸ்ரீ ராகம் தாளம் ஆதி
வந்தாதரித்தருள் என்ற மெட்டு

பல்லவி

செந்தூரிலங்குந் தெய்வமே கெந்தமாதனச் (செ)

அநுபல்லவி

கொந்தார் கடம்பா வாகுக்
குடக்கொடிகொள் கடற்கரையருகிலுறு (செ)

சரணம்

ஆலோல வள்ளி காதலா (சிகண்டிமிசை)
யாரோகணக்கோலாகலா
மேலோர் புகழ் மெஞ்ஞானு
மிர்தந்தொனிசுகிர்தந்தலமகிமைத்திருச் (செ)

பதாம்புயச் சௌபாக்யமே நேத்ரானந்தமாய்ப்
பார்க்கக்கொண்டேன் வைராக்கியமே
நீதானல்லா தியானும்
நிதந்தொழவுஜிதந்தரவேயெவருரை (செ)

ஆபத்பாந்தவனல்லவா பரஞ்சோதிதர்
மாத்மா நன்னீதி சொல்லவா
கோபத்துராத் மாசூரன்
குலங்கெடவே துலங்குப்ரபையயில் விடு (செ)

பூஜானுகூலப்பொருளே கும்பமுனிக்குப்
போதா சதா வந்தருளே
ராஜாங்கச் சத்திவேலா
நடம்ப்ரபல திடம் பெருமை பெருகுக (செ)

---

(வசனபூர்வ வெண்பா)

கந்தன் குகன்கடம்பன் கார்த்திகே
யன்கங்கை மைந்தன்முருகன் வ
ரைபக வெரிந்தோன் அரன் மகன்
வேள்சாமி செட்டிஆசான் வேல
ன் குமரன் மஞ்ஞை யூர்திபுல வன்

முத்துக்குமரையனே—என்ற மெட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டாற்கலி நீங்குமே (க)

அநுபல்லவி.

பிண்டமாரப் பாங்குமே (க)

சரணம்.

அண்டரண்டபகிரண்டமுந்துதிசெய்
தண்டபாணிவேளே தெய்வம்வே
றுண்டுமோவின்னுளே தொண்டர்பணி
கொண்டமர்ந்ததாளே நேரில் (க).

நம்படினம்பரமசம்புமுன்புப்ரண
வம்பகர்ந்தநாதா பொதிகைவளர்
கும்பனிந்த்ரன்வேதா துதிகமழ்க
டம்பணிந்த நீதா நேரில் (க)

வெந்தெரிந்தழர்மடந்தையந்தமொடெ
ழுந்துவந்த தோது செய்தசம்
பந்தனை சாது வெகுமகா
விந்தைவிந்தை யீது நேரில் (க)

கொக்கரிக்குமொருகுக்குடத்வஜசி
கிக்குகந்த நேவே குஞ்சரிவ
ளிக்கிசைந்த கோவே நிறைதயவு
வைக்குமுந்த யாவே நேரில் (க)

முத்தமிழ்க்கடல்மகத்துவத்தையருள்
வித்வசத்தி வேலா குஜதடா
கத்துதித்த பாலா அதிவிதப்ர
சித்தம்வைத்த சீலா நேரில் (க)

---

வாவாவரத வபயகரனே—என்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாதாம்புயசிவகுருபரனே—சுக
பரிமளமிகுமலரணி (பா)

அநுபல்லவி.

பாதா பஹுவதிசுதகுமரசங்
கீதா மதுரிதநயசததள (பா)

சரணம்.

நாளா யுனதடியவனிடுமுறை
கேளா தவிதமெனகுறவளிம
ணாளா யிதுதருணமுதவிடுத
யாளா விகசிததெரிசனைதரு (பா)

கோபா லமருகவரதகிரண
தீபா மகபதிசொரூபமணசொ
ரூபா முருகவதிகதியுலக
லாபா குடமுனிதிடபொக்ஷினி (பா)

நாகா பரணானுதவுமுஜிதவி
வேகா பிரணவமயபுனிதவை
போகா புகழருணகிரிகவிதி
யாகா திகழ்சத்திவேல்பூஜித்ததிருப் (பா)

---

ரேங்கநாயகமே—என்ற மெட்டு.

இராகம்-பிலஹரி தாளம்-ரூபகம்.

பல்லவி.

செந்திலாண்டவனே
சித்தர்களாதித்திடுங்கடம்பணிபவனே (செ)

அநுபல்லவி.

கந்தா அன்பர்க்கொப்
பந்தா வுன்னிருபா
தந்தா குருபரனே (செ)

சரணம்

சந்திரசேகரன் மைந்தாக்ருபாகரா
தந்திசகோதரச் சுந்தரனேதீரா
சஷ்டி நோன்பைய
னுஷ்டி ப்பார்மீது
திஷ்டி புரிகுகனே (செ)

பந்தவினைபோக்கி யெந்தனையாளாக்கி
வந்தருள்வாய்பாக்கி யந்தருவாய்நோக்கி
பண்டா ரவுன்னைக்
கண்டா ரவெண்ணங்
கொண்டே னநமதிசெய் (செ)

தெள்ளித்தினைமாவை வள்ளிதரத்தின்று
புள்ளிமயிலேறு வள்ளலெனுஞ்ஞான
சித்தா யெங்கும்வ
சித்தா யென்பால்மேயா
சித்தா லதுதருமோ (செ)

தண்டுகமண்டலங் கொண்டகும்பமுனித்
தொண்டனுக்குவிஞ்சை விண்டதண்டாயுதா
தம்பா ஜோதியு
டம்பா சத்திவேற்
கின்பா மகிமைதிருச் (செ)

---

யெனக்கார்சகா என்ற மெட்டு

இராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி

ஜெகத்காரணு தேவானுகூலா (ஜெகத்)

அநுபல்லவி

மகத்வாத சாந்தா மலைக்கோவிற்பாந்தாசீர்
மைந்தா செந்தூர்க்கந்தா வன்பர்
தந்தா வள்ளிகாந்தா (ஜெகத்)

சரணம்

வித்வஞான மூர்த்தி வேதமந்த்ரபூர்த்தி
விண்ணுள்ளோருமார்த்தி வேண்டவேசெப்சீர்த்தி
அத்வீதாகாங்கேயா அன்பர்கள் சகாயா பொன்
னங்காவுன் போதங்காவேனைழைபங்கா கார்த்திகேயா

பக்தகோடித்யானம் பாடுந்தேவகானப
பண்புசங்யதானம் [illegible]
சக்தியார்மெய்வாகா சங்கீதப்ரவாகா உத்
தண்டா வுன்போலுண்டோ தொண்டர் கொண்டாடுந் தெய்
[வீகா
சர்வஜீவாதாரா சாயுஜ்யாதிகாரா
ஷண்முகாமயூரா சத்திவேலுதாரா
துருவஜோதிசேந்தா சூழ்குறிஞ்சிவேந்தா முத்
துக்குமாரா குக்குடக்கொடிக்கையா வேதாந்தா (ஜெகந்)

---

ஈசனை நினை மனமே—என்ற மெட்டு

இராகம் கமாசு தாளம் ஆதி

பல்லவி கண்ணிகள்

வேலனைத்துதி நெஞ்சமே சோலைமாமலை (வே)

அநுபல்லவி

ஆலமுண்ட நீலகண்டன் பாலனெனுங்கோலமயில் (வே)

சரணம்

மூலமந்திரம் சொல்லி முழுமனம்நோக்கியே
மூர்த்திபாதாம்புயத்தின் சீர்த்திமெய்தேக்கியே
காலனைத்தடுத்திடுங் கருணையுண்டாக்கியே
கபடருறவதனைக்கனவிலும் போக்கியே (வே)

சற்சனக் கூட்டத்தைச் சார்ந்துறவாடி
தானென்றவகங்காரந் தவிர்த்திடு தேடி
அர்ச்சனை பூஜையையனுதினம் நாடி
ஆவலுடன்பணிவாயானந்தக் கூத்தாடி (வே)

பூதலந்தன்னிலேமாதரை நினையாதே
புறம்பேசுமூடர்களைப் பொருந்திநில்லாதே
சூது கொலை களவிற் செவியுங் கொடாதே
சுத்தாங்கன் சத்திவேலன் தோத்ரமறந்திடாதே (வே)

---

அயிலாயுத சகாயம்

(விருத்தம்)

அமரர்கள் துயரந்தீர அறுமுகத்துடனுதித்துச்
சமரசூரரை வதைத்துச்சதமகன் தருதெய்வானை
கமரிமானளித்தமானைக்கடிமணம்புரிந்தசெந்திக்
குமாரவேள்சத்திவேலைக்கும்பிடலெனதுவேலை.

சேந்தில்க்குமரவேல்—என்ற மெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

சந்தக்கண்ணிகள்.

வேலாயுதந்துணையுண்டு
வெற்றிகொண்டாட (வே)

வீரமகாரணசூரரியாவரும்
வேரறமோதுகுமாரதிவாகர (வே)

விளம்பரம்பெறுமமரர்கள்முறையிட
உளங்கசிந்துதவுமுருகதுரை திட (வே)

விரிதோகைச்சிகிகுருபரதேசிக
கிரிவாசச்சுகியறுமுகநே சிகை (வே)

விந்தியகூடனுவந்திதமே புக
மூந்திரமேவியகந்தபிரான்வடி (வே)

விதியைச்சிறைவைத்துயர்சிருஷ்டியைவைத்
ததையபற்புதமெய்த்திதிமெச்சிய ஜெய (வே)

வித்தகசித்தமகத்துவமுத்திப்
புத்தகமுத்தமிழ்வித்தக சத்தி (வே)

---

## தோகைமயில் விடு தூது.

விருத்தம்.

கடல்நடுவில்மந்த்ரகிரிமத்தாகவேநடக்
கயிறானசேடன்மிடல்சேர்
உடல்நடுவிலேமிதித்தொளிர்சிறகடித்துதரி
உக்ரகெர்ச்சனைசெய்மயிலே
அடல்நடுவிகசிதநிலையடைவதற்கருள்சரவ
ணத்தடாகத்தாமரை
மடல்நடுவிலிலகுகுகனிடமெனதுபஜனைதுதி
மகிழுறநீமொழிகுவாயே.

இராகம்-பரசு தாளம்-ஆதி.

பல்லவி

மயிலேநீபோய்ச் சொல்லிவா (மயி)

அநுபல்லவி

மகத்வகுன்றாரைநாடி குகத்தம்பிரானைத்தேடி (மயி)

சரணம்

சைலவாஸீசன் மைந்தன் கதிர்காமமேவுசொந்தன்
அயிலாயுதச்சம்பந்தன் ஆறமுசஞானனந்தன்
அருட்ஜோதி நெஞ்சத்
தெருள்க்யாதி விஞ்சைப்
பொருட்ப்ரீதி யென்று
அன்புடனீராறு காதில் (மயி)

சாதுபாதப்ராசாதம் சாம்ராஜ்யமேமெய்ப்போதம்
பாதுகாப்பாற்றநீதம் பாக்யவேதாந்தகீதம்
பாடி ஞனே கோடா
கோடி தானே யங்கொண்
டாடி னேனே யெல்லாம்
பார்த்தவுனக்குச் சொல்வானேன் (மயி)

கந்தவேளென்றசொல்லைக் கனவிலுமறந்ததில்லை
சுந்ததவானோர்தொல்லை தவிர்த்திடுஞ்செந்தூரெல்லை
சண்டவேக திடங்
கொண்டுமேக வுனைக்
கண்டநேக விதஞ்
சத்திவேல்நான் சொன்னதாக (மயி)

---

## பரமனுமைக்கு விண்ணப்பம்

இராகம் இந்துஸ்தான் பியாக்—தாளம் சாப்பு

பல்லவி

மாதா பிதாவாய் மதுரை நகருற்ற
மாக்ஷி சொக்கேசா மீனாக்ஷியம்மா

அநுபல்லவி

வாதாகாதுன்மைந்தன் வையாபுரிக்கந்தன்
வாராதிருந்தால் விடேனே சும்மா (மா)

(தொகையறா)
ஆதாரமாறுமுகநாதாவென்றேனே
அறிந்திலையா
போதாது சுகவாழ்வு தாதாவெனப்பூஜை
புரிந்ததிலையா

(சந்த முடுகு)
அனைத்தையுந் தெரிந்து கொண்டவனகஞ் சிறந்தான்
மனத்துயரகற்றிட வருங்குகன் திறந்தான்
மாப்பிட்டுக்காய் முன்ன
மண்ணைச் சுமந்தவா
கூப்பிட்டுக்கேளென் குறையகல (மா)

(தொகையறா)
சீரானகலியுகந்தனிலிரக்ஷிக்கின்ற
தெய்வமென்றே
பேராறு செவியிலுங் கேட்கும்படிக்கின்
றிசைத்து நின்றேன்

(சந்த முடுகு)
சிவபெருமானுக்குந் தெரிவித்ததறிவாய்
தவமிருந்திடுஞ் சத்திவேல்க்கருள்புரிவாய்
தாயாகி வந்த
தயாபரியம்பிகா
நீயாகிலுஞ்சொல்லென்னேரில் வர (மா)

சாவரியான மாருரே என்ற மெட்டு

இராகம் தேசிகபியாக்—தாளம் ரூபகம்

கண்ணிகள்

வள்ளி—நாதாவிநோதா பொற்பாதனே
வுனை—நம்பினேன் சதா (வள்ளி)

நீதானல்லாது வேறுதாரங்காண்கிலேன்
அதி—நேர்த்திமயூரனே கார்த்திகா வுனை (நம்)

சூதான சூரனை வாதாடியே வென்றுய்
சிவ—சுப்ரமண்யப்பொருளே கந்தா வுனை (நம்)

தாண்டவமாடிய ஆண்டவன்பாலனே
பரா—சத்திவேலாவனுகூலனே வுனை (நம்)

---

## வள்ளியம்மைக்குச் சொல்வது

(விருத்தம்)

திருமாலின் மோக ரஞ்சிதகேவி விபுதையாள்
செல்விகருமாரியாகிச்
சிவசுப்ரமண்யரைத்திருமணஞ்செயவெணிச்
செய்தவத்திற்குவந்து
வருமாறுமாமுகன் வையத்துவனிதையாய்
மானுன்னை யீன்ற காலம்
மகிமைதெரிசனமுறச்சகிதபதியாட்கொள்ள
வருவனென வாக்களித்த

தருமாதனக்கடவுள் மொழிதவரிடாதருந்
தவமிகுஞ்சிவமுனிக்குத்
தனையையெனவந்த நீ யெனையாளுமொருவித
சகாயமேசெய்யவேண்டும்
ஸ்ரீமானிலத்திலுனைமறவாதபத்தி நெறி
விலகாத சத்திவேலன்
வெள்ளமெனவுள்ளமகிழ்கொள்ளமயில்வள்ளல்வர
வின்னுகுறவள்ளிமாதே.

---

சாமியைநீகூட்டிவா யென்ற மெட்டில் சேர்க்கை

இராகம் காம்போதி—தாளம் ரூபகம்

பல்லவி.

விள்ளுவாயே தாய் வள்ளிநாயகமே யெந்தன்
விண்ணப்பத்தையாறிருகண்ணப்பர்க்கு நேரினில் (வி)

அநுபல்லவி.

வள்ளலான ஞானதேசிக
மகிபன்திருவுளமுருகவே சிகிகொண்டெனதெதிர்வருகவே (வி)

சரணம்

மா தவமுனிவர் பணியுமு
மா பதிசுதனடவியிலோர்
மா னைத்தேடி வந்து வேங்கைமர
மா யிருந்து தெள்ளிப தேன் தினை

மா வையுண்டுமெனமகிழும் பூ
மா னெனுங்குக் குடக்கைமுத்துக்கு
மா ரன் மண
மா தரச
மா வதிகவிபர
மா .... .... (வி)

வே தனமரர்பரவுதிரு
வே ரகபிரணவசுமதி
வே ணியணிபரசிவகுரு
வே யலதுகலியுகதெய்வம்
வே றிலையெனவுறுதிசத்தி
வே லன்மனதொடுதுதிசெய்வி
வே கனிது
வே ளேவர
வே னுமவசரமென
வே .... .... (வி)

---

## மாதா தெய்வானை மனு.

### விருத்தம்.

இந்திரனுக்கருந்தவத்தால்க்கிடைத்த பொன்னே
இகபரமுங் கதிதருந் தெய்வானைத்தாயே
அந்தரத்தோர் மனதைகளித்து மகிழவேண்டி
அயிராவதம் வளர்த்த வம்மையாரே
கந்தனுக்கு மணப்பாரீ கமழுஞ்செய்ய
கஞ்சமஞ்சும் பதத்தாளே கருணையாளே
யெந்தமக்காய் குமரபிரானிடத்தில் நீயும்
இங்கு வரும்படிக்கொரு சொல்லியம்புவாயே.

---

வேலா நீ கேசீ—என்ற மெட்டு.

இராகம் அமீர் கல்யாணி தாளம் ரூபகம்.

சந்தக்கண்ணிகள்.

மாதா நீ மொழி தா
மார்த்த மூர்த்தி கார்த்திகேயர்க்கு (மா)

மகபதி மகிழ் மிகபாகவி
யுகவரநிதி குகபதியிடம் (மா)

வழக்குண்டோர் சிறுபிள்ளை கை
தொழக்கண்டேனெனவுள்ளதை (மா)

வஞ்சத்தன் நெஞ்சத்தைக்
கெஞ்சித்தென் குஞ்சரி யெனு (மா)

வளங்குஜங் குளந்தனில்
விளங்குவோனுளந்தெரிய (மா)

மங்களவடங்கொள் கடம்ப
னிங்கிதப்ரபந்தவசன (மா)

மௌனவிம்ப வவுணர் வம்ப
பௌரி கொண்ட கௌரி சேய்க்கு (மா)

மகிமைத்திட சிகிகுக்குட
சகிதத்தினொடு புறப்பட (மா)

வாரணமாமுக சோதரன்
பூரணமா யெதிரேவர (மா)

வாத்யம சாத்பமுழங்கவே
பாத்யதை சீர்த்தி வழங்கவே (மா)

மாரனைத் தகித்தோன் சுதன்கொடுஞ்
சூரனைச்ஜெயித்தோன் மணந்திடு (மா)

மண்டல நித்ய கல்யாணன் முன்னதாகத்
தொண்டன் நத்திச்சத்திவேல்நான்சொன்னதாக (மா)

பாதசேவை மீது தேவை
சூதென்மேல் வையாது பூவை
நாதனுர்க்கிப்போதிலே சாம்
ராஜ்ய காக்ஷி தீக்ஷண்யந்தா (மா)

---

## திருவாவினன்குடித்தெய்வ
## (தேனபிஷேகப்பூஜிதம்.)

இராகம் இந்துஸ்தான் பியாக்—தாளம் ஆதி

பல்லவி.

தேனபிஷேகத்திருப்பழனிக்கந்த
சேவைப்ரகாசச் சிறப்பானந்தம் (தே)

அநுபல்லவி.

வானுவி மானர்கள் வாழ்த்துந்தேவா நான்
மறக்கேனுன் செம்பொற் பாதாரவிந்தம் (தே)

தொகையறு.

ஞானமிர்தக்கடலிரக்ஷிப்பை யென்றவோர்
நண்பு கண்டோ
சேனுபதிப்பட்டமுன்படைத்தாய் வேறு
தெய்வமுண்டோ

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184339

(சந்தமுடுகு.)

திருப்புகழ்க்கருட்செயத் தெரிந்ததுன் தீரம்
மருப்படிகடம்பனே வர நல்ல நேரம்
மாங்கனிக்காய்ச்சுற்றி வந்தை சராசரம்
காங்கேயனே காப்பதுந்தன் பரம் (தே)

தொஹைறயரு.

காலால் நடக்க முட்டைக்கு மென்றாலலது
கடிய வழியென நினைந்தால்
மேலாமனே வேகமயிலில்லையோவதன்
மீதிலன்போடமர்ந்தால்

(சந்தமுடுகு.)

விரும்புமுன் வருமுந்தன் விகசிதக்காக்ஷி
கரும்பினுமினியநின் கருணையேமாக்ஷி
கண்டானந்தங்கொண்டு
தண்டாயுதா வென்று
கொண்டாடும் சத்திவேல்த்
தொண்டன் தமிழ்த் (தே)

---

(மடக்கடி விருத்தம்)

திருவானையிந்திரனைத்திருவானைதரப்புரந்து
திருச்செந்தூர
மருவானையசடருள்ளமருவானையிகபரத்து.
மாறுவின்பந்
தருவானைப்புனவேங்கைத்தருவானைத்தொடநின்று
தனிமாதைக்க
வருவானைச்சிகியேறிவருவானைத்தினந்தினமும்
வழுத்துவோமே.

---

## எல்லாங்குகமயமே.

இராகம் ஹரிகாம்போதி—தாளம் ஏகம்

கண்ணிகள்.

குகமயம் குன்றாரிலங்கிய ஜெயம் (கு)

ஜெகஜோதிதிலகனாகிய
சுகசோபித மகிமைபெற்றிடு (கு)

சிகிவாகனசுகுணாகர
புகழாகிய சுகிர்தமுற்றிடு (கு)

கெணிகடம்பமணிவடங்க
ளணிதிடங்கொள்சரவணம்
கிண்கிணிசிலம்பணி
ததும்புபாதவரகுணம்
கெங்கையாற்பதம் இரு
மங்கைமார்க்கிதம் (கெங்)

கீதாமிர்தாமணசத்திவேல்க்
காதாரகுமரமகத்துவ (குகமயம்)

---

## மனதுக்குச்சொன்ன வழி.

தஞ்சை—யென்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ஆதி

சந்தக்கண்ணிகள்

நெஞ்சே தொட்ட
நிஷ்டையைக்கைவிட்டிடாதே (நெஞ்)

நிதஞ்சொல்வதுதகுந்த
விதஞ்செய்பூஜைதெரிந்த (நெஞ்)

நேசதொந்தமேசுரந்த
வாசனெந்தைதேசுகந்த (நெஞ்)

நேமன்சுந்தரநாமன்மைந்தனே
க்ஷேமந்தந்திடவே முன்னுய்ந்திட (நெஞ்)

நீடும்சங்கதி தேடும்பங்கதில்
நாடும்பண்துதி பாடுண்டுங்கதி (நெஞ்)

நிறுத்திபொருவழி திருத்தி குருமொழி
பொருத்தியருள்பெற கருத்திலுறமொடு (நெஞ்)

நீபத்தாரிக லாபத்தேறுமி
லாபத்தோடுச லாபத்தீரனே (நெஞ்)

நிலமும்பலமும் நலமுஞ்சுறவே
தலமுங்குலமும் பலவும்பெறவே (நெஞ்)

நீமலையாம லேதாமமனோகர
மாமலைவேலவ னேமகிழ்வாய்வர (நெஞ்)

தஞ்சமடைந்தவர்க்குச்சமயோபகாரன்
சரவணபவகுகவரதவொய்யார ன்
விஞ்சைமந்திரச் சத்திவேலனுதாரன்
வேடராணி கூடுநாத
னேடுபேணி யாடுநீச (நெஞ்)

பாலராமனென்ற மெட்டு.

இராகம் தோடி—தாளம் ரூபகம்.

பல்லவி.

தோகைமயில் வாகனா—பசுந் (தோ)—யெந்தன்
தோத்திரக்கீர்த்தனை சேர்த்திடுமோகனா (தோ)

அநுபல்லவி

நீ கைவிடாயென்று நிச்சய மாகி
நெஞ்சில் நினைப்பவர்க்கே நித்ய த்யாகி
ஆகையினாலென்னை யாட்கொள்வை யூகி
அன்பும் கொண்டுன்றனுண்டன்
பண்புங்கண்டின்பாகி (தோ)

ஞானக்களஞ்சியமே—கல்வி (ஞா)—கௌரி
நாணற்குளத்தினிற்காணக்கண்டே ஜெயமே (ஞா)

வானக்குலிசேந்த்ரன் வாழ்த்து கெம்பீரா
வஸ்து தெய்வீகமே சத்ரு சங்காரா
த்யானமனோகரத்திவ்யா லங்காரா
சித்திக்குஞ் செந்தூரா
பக்திக்கோர் விஸ்தாரா (தோ)

சாமளமால்மருகா—திருச் (சா)—வேத
சம்ரம கோலாகலம்புரிவேல் முருகா (சாம)

கோமளமாவள்ளி குஞ்சரி காந்தா
கோர்த்திடுமாதாந்தக்கார்த்திகைச் சேந்தா
பூமழைதேவர் பொழிந்திடுஞ் சாந்தா
புத்தி மகத்துவ வேந்தா
சத்திவேல் வைத்தருள் பாந்தவ (தோ)

விருத்தம்.

முருகாகுமாரவென்றனுதினமு முந்தனிட
முறையிட்டதென்ன பொய்யோ
முத்தணியீராறுசெவியிற்சேவல்மாமயில்
முழக்கினுர்க்கேட்கவில்லையோ
உருகாதெனுன்மனங்கல்லோயிரும்போ
வுனக்கென்னவஞ்சமுண்டோ
உத்தமாவுன்தந்தை பித்தனுமென்பா
ருனக்குமப்பித்தமுளதோ
வருமானபரதஜோதிடபண்டிதச்சோலி
வலுவாய் நடப்பதாலோ
வந்திடப்பாதாரவிந்தநொந்திடுமெனில்
வாகனமுனக்கில்லையோ
தருகாதுவந்துனதுதரிசனந்தந்தெனைச்
சார்ந்துரக்ஷித்தல்கடமை
சண்டசூலக்கரிய கண்டநாதற்கருள்செய்
தண்டபாணிக்கடவுளே.

---

## வள்ளியம்மை சுயவரம்

கண்டோர் களிக்கவந்தமாது—என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி தாளம்-ஆதி.

சந்தக்கண்ணிகள்.

தணிகாசலக்கந்தன்கல்யாணம்—சத்திவேலதொட்ட (த)
அணிபணிமுனிவர்கள் பணிவொடுதேடும்
அரனருளியகுமரனையேகொண்டாடும் (த)

பணிமாமதிவெஞ்சூர்ய கோடி—சித்தாதிசங்கந்
திணிபாலகர்கள்நான்கு ஜோடி—கோவினிற்கண்டா
மணியானதையசைப்பர் கூடி—மகிழ்ச்சிகொண்டு
துணிவார்பாற்காவடிகொண்டாடி—ப்பாடுஞ்சந்தர்ப்பஞ்
சுந்தராகாரதனெந்தைகுகன்தனை நேரே—கண்டெங்கினும்ந
டந்திடுவிந்தைதினந்தினவந்துரைப்பாரே—நல்லாதீனத்தில்
வந்துகனிந்தபழந்தனிகண்டதி சீரே—யென்றாரதற்குள்
யெந்தவிடங்கனிகண்டவிதம்பகர் வீரே—யென்னவேஞானி
செங்கரும்பினியமொழிமங்கையுருவங்கள்சொலநானே
சேடனாவினா
லுங்கருதியங்கவயவங்களிலோர்பங்குமுரைப்பானே
சேலைப்பழித்த
பொங்குவிழிசிங்கவிடைகொங்கைகள்தென்னங்குரும்பை
தானே
ஆரண்யத்திற்கண்
டெங்கள்துரைமங்கிலியமுங்கொளெனநங்கைகுறமானே
கோபங்கொண்டங்கு

போகவிரட்டின ளாகயினிக்கண
மேகுபுறப்படு த்யாகவெனச்சொனபோது
கானுறும்வேட

தேகவுருக்கொடு மோகமுரைத்திட
வேகமனத்தோட னேகமிசைத்தனள்மாது
அண்ணன்மாரைக்கண்

டாகுலமுற்றதி யூகமோடத்ததி
மாகமடுத்திட யேகிளைத்தளிர்மாது
வேங்கைமரம்

தாகிமிகக்கிழ யோகியெனத்தினை
மாகடிதிற்கொடு தாகமெடுக்குதென்மீது
தயைசெய்யென்ன

நீருந்தவ நேரமுந்தட வாரிசைந்தமிழளே
பாரதநதவகோரதந்தியி நேர்பயந்திருதோளே
சேரவந்தவவாரிநிந்தன சீரணிந்தசெவேளே
தாரகந்தவராருமுந்திரு வேரகந்திருநாளே (௧)

---

காக்ஷி கண்காக்ஷி—என்றமெட்டில் (சந்தச்சேர்க்கை)

இராகம் ஹரிகாம்போதி—தாளம் ஆதி

பல்லவி

உண்டோவோர்தெய்வமே வுந்தன்போலே கந்தாவு (உ)

(அநுபல்லவிச் சந்தம்)

உயர்ச்சிபெற முயர்ச்சியுறவுலகினி (லுண்)

உளம்பொருந் திளங்குமரகுரு (வுண்)

உருகியவடியவ ரிருதயமகிழவே (வுண்)

உடலும்பொருளும் உயிரும்பலவுந்
திடமுங்கனமுஞ் ஜெயமுந்தரவு (முண்)

உம்பர்களும்பர வும்புகழுந்தவ
சம்ரமரும்புவி யும்பணியுந்திற (னுண்)

உரத்தில்மதித்த தரத்தைவிரித்த
வரத்தில்மிகுத்த கரத்தணிகர்த்த (துண்)

உதவிக்கதிவிக சிதவிக்ரகமது
ரிதவற்புதவுயர் பதவிக்கருள்செய (வுண்)

சரணம்

கொண்டல்தவழும்பழநிக்குன்றுறைந்த ஜோதியே
குங்குமஞ்சவ்வாது தேனேடஞ்சபிம்ஷ காந்தியே
தொண்டர்களரோகராவென்றன்சொல்லான தாதியே
சுத்தமனபக்தகோடிதோத்திரப்ரைக் யாதியே
துந்துமிசிறந்தமேள வாத்யம் தேனி
றைந்தசர்க்கரைப்பொங்கல்நை வேத்தியம் அன்றி
யெந்தநேரமுந்தூபாதி பாத்யம் செய்ய
வந்திடும்பாற்காவடிய சாத்யம்

சூழுங்கோவிற் ப்ரகாசம்
தோதுண்டோ கயிலாசம்
வாழும்பக்தி விஸ்வாசம்
மன்னன்சத்தி வேல்நேசம்
கொண்டானந்திக்க (வுண்)

---

அய்யாபழனி என்ற மெட்டு

இராகம் ஸஹானா—தாளம் ஆதி

கண்ணிகள்

ருத்ராக்ஷமகிமைச்சொ ரூபா மிகுக
ருணையருள்கிரிப்ர தாபா
சத்ராதியசுரர்மேற் கோபா வுயர்
தரிசனக்கார்த்திக தீபா சப்த
சாகரத்தொழித்தவீரபாகரைத்தெளித்தபார (ருத்)

வச்ராயுதன்சுதைச மேதா ஜொலி
மகரகுண்டலமணிக் காதா
அச்வாதிவாகனவி னேதா அகி
லாண்டர்புசழுஞ்சாமி நாதா பாடி
ஆயன்மருகாப்ரபுடாராயணனதிராணதிட (ருத்)

பண்டாரஞானதண்ட பாணி திருப்
பழநிமலைமுழுதுங் காணி
கொண்டாடுந்தேவனெனப் பேணி க்கரங்
கூப்பித்தொழுதுகொண்டேன்த்ராணி நறுங்
கொந்தாரிலங்கு கடப்பந்தாரலங்கிர்தஞ்செய் (நத்)

கண்டாமணிசேகண்டி கணிக்கும் கண்டு
ககனத்தவர்வருவர் பணிக்கும்
வுண்டோவோர்தெய்வஞ்சுப்ரமணிக்கும் என்ற
வுறுதியைச் சத்திவேல்ர மணிக்கும் பக்தி
ஆழியன்கச்சிக்குவீரசோழியமளித்ததீர (நத்)

---

குமராயிகபர யென்ற மெட்டு

இராகம் பூரிகல்யாணி—தாளம் ஆதி

பல்லவி

முருகாதுணைமுராரியரிமருகா—தமிழ்
மொழியுந்திருக்கருணை (மு)

அநுபல்லவி

உருகாதென்னஉளங்கசிந்தொருதரம்
உதவிபுரியுஞ்செல்வப்பதவியனுக்ரகஞ்செய் (மு)

சரணம்

கெஜமாமுகசூரன்றனைவதைக்கக்
க்ரௌஞ்சகிரியதையிப்ரபஞ்சமீது
கிரணசத்திவேல்பிடித்துஜெயித்த
கிருபைப்ரபாகவுனக்கார்தோது
பஜனமிர்தபரிமளபதப்ரீய
பதுமதளசரணசதுர்முககுருபா (மு)

துமேபடா யென்ற மெட்டு

இராகம் தேசிகபியாக்—தாளம் ஆதி

பல்லவி

கடம்பணிநாதா காஷாப்பாதா
யிடம்பொருள்யேவல்யாவும்
யீதாவுன்னலா கா தா (கடம்)

அநுபல்லவி

நடம்புரிவாசி வாகனப்பாகச்சேவைதாதா
நாக ரீக தேக வாக (கடம்)

சரணம்

காதல் மாத ராசை நேசி யாதெனை
நீத வேத பூஜை தேசி காவனே
கீத ப்ரீத வோசை பேசி வாசனே
போத மீத லேசை யோசி யாநினே
கடவுளேமயன
திடர்பொடிபடத்
திடமுடனுன
தடியவனிடம்வரும் (கடம்)

(தொஹையரு)

சதாநினது பாதமே சாஷ்டாங்க பூஜிதம்
சாஸ்வதங்கொண்ட சேயே
சாரதாநாரதாதிகளுந்துதித்திடுந்
தவநிலைத்தெய்வ நீயே

(முடுகு)

தமிழ் மழை பொழிதரு
வளமையுறுசுனிமலர்
கமழ்கழுகுமலையில்
அமுதுரைபெறுசத்திவேல்க் (கடம்)

---

கல்யாணஞ்செய்துவைபுமே என்ற மெட்டு

இராகம் பார்ஸி பியாக்—தாளம் ஆதி

கண்ணிகள்

தண்டாயுதாவுன் தஞ்சமே—தெரி
சனந்தர வஞ்சமேன் (த)

தண்டாமரைச்சரவணநதி பிறந்தாய்
சமரசகுமரனென்றுலகினில் நிறைந்தாய்
வண்டார்குழல்வள்ளிமயக்கத்திற் சிறந்தாய்
மலரடிபணிந்திடுஞ்சிலரையேன் மறந்தாய் (த)

மண்டலந்தனிற்பிடி வாதமே வழக்கம்
மதலையுன்தாய்தந்தைமரபினர் பழககம்
வண்டருக்கிரங்கிநல்வரந்தரு மொழுக்கம்
மலைமுழுவதுஞ்சங்கவாத்திய முழக்கம் (த)

திருப்பரங்கிரிக்குகை தேன்தரு கரும்பா
சிறியவனிடுமுறைச்செயலொரு துரும்பா
விருப்புடனினதருள் வேண்டினன்விரும்பா
விதமெனகுகனே வுன்மனமுங்கல் விரும்பா (த)

சரமழைபொழிந்திடுந்தமிழ்க் கதிகாரா
தாணிபர்புகழ் சத்திவேல்க் குபகாரா
குரவணியரன்மகிழ்குமர கெம்பீரா
கோரினபடிபருள்குலவு மயூரா (த)

---

## தேவசேனபதி பூஜிதம்

கொந்தாரும்பூங்கணை என்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ஆதி

பல்லவி

சேந்தா பதாம்பூஜிதம் தேவ
சேனபதி செல்வ
ஞானநிதி கல்வி
மானர்துதி குக (சே)

அநுபல்லவி

வேந்தசுரேந்த்ரா வித்வாங்கமாந்த்ரா
விசித்தரூபலாவண்யா மகாபுண்யா
சுப்ரமண்யா அதிகெண்யா வன
வேடுவர்க்கருள்சீலா துதி
பாடுவர்க்கனு கூலா
வீரம்புனை சூரன்குல வேறும்பட வேவென்றனை
விண்ணும்பர்கள் நண்ணும்பணி
பண்ணன்பொடு மண்ணும்புகழ் (சே)

சரணம்

சாம்பவிசேயா சாக்ஷாத்காங்கேயா
சததளங்கொள்தடாகா குக்குடாகா
ப்ரபுடிகா சித்ர வாகா நீபத்
தாரணிந்திடுமார்பா திரு
வேரகந்தலச்சார்பா
சாதித்திடு வேதப்பொருள் போதித்திடவேசத்திவேல்
தஞ்சம்மென நெஞ்சம்புக
னுஞ்சம்ப்ரம தன்சண்முகச் (சே)

அடங்கலுஞ்ஜெகசோதி—யென்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

சந்தக்கண்ணிகள்.

தினந்திருக்கலியாண மகத்துவ தேவா குன்றாரிலங்குஞ்
சிக்கந்தச்சொக்கத்தங்கமே தெய்வானைகாந்தா—(சிக்)

திண்டிறல்கொண்டிடுமெண்டலர்தொண்டிடு தேவா
திகழும் புகழும் நிகழும் மகிழுந் தேவா
திடத்துடன் பிடித்தகுக்குடச்சிகிகொடத்திடு தேவா
திங்களொடு கங்கையணி சங்கரனிளங்குமர தேவா
திண்புயாசலக்கடம்ப நன்பொய்யாரமெய்யுடம்ப தேவா

தித்திக்குஞ்செந்தேனையளித்தகு
றத்திக்குஞ்சொந்தா நயவித்தக தேவா

சேவித்திடுமடியவர்பலகோடியர்
தாவித்துதிகவி வாணர்கள்நாடிய தேவா

மனந்தாபொற்பதமதுரிதந் தேட
மதலைமொழியெனும்பாமாலையைச் சூட
தனந்தாநினையேசதாவுங்கொண் டாட
ஜகம்புகழ்ஜெயசத்திவேல்தமிழ்ப் பாட
தாஷ்டீக நாளுங்கை கூட
சாமி நீசெய்வாய் தாஷ்டீக

மத்தினமே—யென்ற இந்துஸ்தான்மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பைரவம் தாளம்—ஆதி.

வேகமயிலேறும் வேலா விகசிதனே
வேலா விகசிதனே (வே)

போகர்மெஞ்ஞானி புகழ்தமிழ்த்யானி (வே)

(தொஹையரா)

ஆகாததொன்றில்லையாகையாற்கிருபைதந்
தாதரித்தாளையனே
பாகானவசனனே பாலாபிஷேகனே
பன்னிருகரத்துய்யனே.

(சந்தம்)

அங்கமணங்கள பங்கள்வழங்கும்
மங்களவொண்புகழெங்குமுழங்கும்
ஆலயத்தோனே சத்தி
வேலனுக்காக நத்தி (வே)

---

தேவாதி தேவா—யென்ற மெட்டு.

இராகம்-பியாக் தாளம்—சாப்பு.

கண்ணிகள்.

தேசோன்மயானந்த தேசாதிபா நின்
சேய்சத்திவேலன் தொழும் பார்த்திபா
காசாசைவேசைக் கடல் நீத்தவா துற்
கர்மந்தவிர்த்துன் கரை சேர்க்கவா (தே)

நேசா நினக்கென்ன கன் னெஞ்சமா நீ
நேராய்வரா தின்னமேன் வஞ்சமா
பூஜாபலன் செய்தமேதன் கொஞ்சமா யென்
போலவர்க்குமுத்தி தந்தாய் லஞ்சமா (நே)

வேதாகமஞ்சொல்வதோ விந்தையே மெய்
வேண்டாதபேர்வாழ்வதே சந்தையே
ஆகாரமுந்தந்தருள் தந்தையே தா
யானுனுமுன்மேற்சதா சிந்தையே (நே)

மாதாதெய்வானை மகிழ் போகனே முன்
மானின்றவள்ளிமணப் போகனே
நாதாவிண்ணுதார மயில் வேகனே
நற்கீரனைக்காத்தமா யூகனே. (நே)

---

மைக்கூந்த—யென்ற ஹிந்துஸ்தான் மெட்டு.

இராகம்-பியாக் தாளம்-ஏகம்.

பல்லவி.

கொண்டாடுந்தண்டாமரைப்பாத
குழந்தைவேலா

அநுபல்லவி

குதுகுலாவிகசிததருண
மிதுகைலாபமுஜிதகருணை (கொ)

சரணம்

கண்டாளுந்தர்ம பூபா
காருண்யதேவாகலாபா
உண்டோதெய்வமுனையல்லாதென்ற
உறுதிகொண்டுளங்கருதுந்தொண்டர்கள், (கொ)

தொஹையரா.

புண்யதனதா திதிக்குப் பாலரிதமுடன்
பூஜைபுரிசுப்ரதீபா
கண்யதஜனதனசகோதரிசுதாசுகிர்த
கலியுகவரப்ரதாபா.

பாட்டு.

புத்தமுதக்ஷேத்திரமிப் பூமி
பொற்க்ரீடப்புரவல நேமி
வித்வசத்திவேல் தொழும்சாமி
வேடபாங்கிசாஸ்வதபதி
பாடலோங்கிக். (கொ)

---

பஹாரியாலா—யென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி தாளம்-ஆதி.

பல்லவி

கடாக்ஷவேலா நித்ய
கல்யாணிபாலா (கடாக்ஷ)

அநுபல்லவி

சடாக்ஷரா பஞ்சாக்ஷரா சதானந்தா குசாலா
திடாக்ஷிதந்து ரக்ஷப்பாய் தெய்வானை லோலா
திருச் செந்தூர் மூலா
நேரில் வந்தாள் சீலா
செழிக்கும் பூமியோர்
பழிக்கு மென்பவ
மொழிக்கும் பக்திசெய்
வழிக்குகந்த (கடாக்ஷ)

(பல்லவித்தொடர்)

அஷ்டாங்கயோகா பொற்க
டம்பாவிசாகா
துஷ்டர்கள் சம்மாரகா சுகாகுகா விவேகா
கஷ்டநிக்ரகா சுமங்களா விவேகா
ஞானக் கந்தாவாகா
த்யான முந்தாயோகா
கதம்ப முமிர்க
மதம்பெ ருகுமு
சிதந் ததும்புமுன்
பதம் பணிந்தேன் (கடாக்ஷ)

---

சடைமறைத்துமகுட—மென்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

கண்ணிகள்

கடல்முழங்குவிகட செந்திற்கந்த நாதா வுனைக்
காண்கவெண்ணங்கொண்டேன்சிவசம்பு போதா
கடம்பணிந்துதிடமிதாத கஞ்ச பாதா யெனைக்
காவாதேவாமூவா ஞானங்கமழ் கீதா சிவ
காமிதடாகமே நாட சத்திவேல்
நேமிசடாக்ஷரந் தேட இப்
பூமிமகிழ்ந்துகொண் டாட
புகழ்மிகுமலைகளிடம் (கடல்)

மன்றுளாடியவா—என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி தாளம்—ரூபகம்.

பல்லவி

குன்றைநாடியவா தேவா (கு)

அநுபல்லவி

கும்புநின்று நம்புதொண்டர்
அன்புகொண்டு கும்பிடுந்தென் (கு)

சரணம்

அன்றுமெய்ச்சண்முகந்தோ டுதித்தவா
ஆகவந்தன்னிலயிலை மதித்தவா
சென்றசூரர் மடிய வதைத்தவா
ஜெகணக திமிதக வெனவே
திகிடதிமிடதிறமினவே (கு)

சேவலையென்றுங்கொடியாய்ப் பிடித்தவா
தேவேந்திரன்னெஞ்சத் திகிலை பொடித்தவா
பாவைதெய்வானை கல்யாண முடித்தவா
பரிமளக்குழலினர் நடிக்கவே
சரிகமபதநிச படிக்கவே. (கு)

வள்ளியைத்தேடிவனத்தினிற் சென்றவா
வாகானவேங்கை மரமாகி நின்றவா
தெள்ளியதேனுந்தினைமாவுந் தின்றவா
சித்தமோடுனையனுதினமே
சத்திவேல்பணியும் விற்பனமே. (கு)

கண்ணுக்குத்தோணி—யென்றமெட்டு.

இராகம் தேசிகதோடி—தாளம் யேகம்

பல்லவி

துஷ்டசம்மார தூரந்தரனே
சோடசதிபகிரந்தர னே (து)

அநுபல்லவி

அஷ்டாங்கயோக மனுக்ரகசஞ்சீவி
ஆண்டவனே வல்லவா—மாறுந்
தாண்டவன் சேய் நல்லவா—வுனை
வேண்டநலஞ் சொல்லவா (து)

(சரணமுடுகு)

ஆசிபேசு சிகிவாசிமீதுவரு
தேசிகாரமணிகா
மாசிலா கணித ஜோதிஷாதிபகர்
பூஜிதாகெணிகுகா
அருணகிரி தருணமறி
கருணைபுரி முரணெதிரி (து)

குன்றுதோறுடல் புரிந்தவனே
கோதற்றவிஞ்சை தெரிந்தவனே
அன்றைந்திலொன்றுக்குள் சென்றிடப்பன்றி போ
லானமாயன் மருகா கல்வி
ஞானதயாமுருகா யென்மே
லேனோ மனமுருகா

முடிகு.

ஆகமத்துணைவர் சாகரத்திரடு
வாகவைத் தசுரனை
வேகமுற்றவடி வேல்விடுத்துவிரை
வாயழைத்தபரனே
அமரர்துதி விமரிசைகொள்
குமாரகுகா சமரமகா (ஆ)

மைக்கூந்தபேக்குர் என்ற ஹிந்துஸ்தானிற் பின் சேர்ந்த (மெட்டு)

இராகம் ஹிந்துஸ்தான் பியாக்—தாளம் சாப்பு

பல்லவி

தேவி குமாரா கந்தா வுனது
தெரிசனந் தா (தேவி)

அநுபல்லவி

சிறுவன்மீது வருமமேது
பெருமையோதும் பரமசாது (தேவி)

சரணம்.

கூவியழைத்தசப்தம் கோடான கோடி நித்தம் மெய்
[ப்ரசித்தம்
கொஞ்சங்கேளாதோ செவி
வஞ்சர்வாழாத புவி
தஞ்சமென்றேனீயல்லால் யாருதவி (சிறு)

முத்தமிழ்மோனகுறுமுனிக்குரைத்தாய் சற்குரு மூர்
[த்திதிரு
மூத்திக்காதாரவித்தாய்
சித்ரப்பாதாம்புயத்தாய்
சத்திவேலணியச்சரவணத்துதித்தாய் (சி)

அமாரநபி யென்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக்—தாளம் ஆதி

பல்லவி

பழநிமலைவாழும் பண்டாரதேசிகனே (பழ)

அநுபல்லவி

இளநீர் பஞ்சா மிர்தங்தே
னேகாந்தமாச் சொரிந்தே
கழனியெல்லாஞ் செறிந்தே
காக்ஷிதரச் சிறந்தே (பழ)

தொஹையரா

திருஞான சம்பந்த னெனவந்துசமணரைத்
தீயகழுவேற்றுவித்தாய்
உருவான தில்லாத பிடிசாம்பலைப்பெண்
ணுருக்கொண்டுயிர்க்கவைத்தாய்

(பாட்டு)

உனைநம்புந் தொண்டன் பாடும்
வோங்கின்பாங்கேகை கூடுந்
தனைவின் னுள்ளாருந் தேடும்
சத்திவேல் நித்தங்கொண்டாடும் (பழ)

## சிவாசல தேசிக பூஜிதம்

விளக்கிடு மீனாக்ஷி யென்ற மெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக்—தாளம் ஏகம்

பல்லவி

திருப்புகழ்சிந்தானந்தந்துலங்குதே—தென்பரங்கிரித்
தேசிகனுலென்பேர்மு முழங்குதே (தி)

அநுபல்லவி

விருப்பொடுநாடலா மெஞ்ஞானந்தேடலாம்
விற்பனந்திகழ்ந்திடுங் கொண்டாடலாம் கல்வி
வித்தானசைவமே சித்தானதெய்வமே
மேன்பாடா யான்பாடத் தான்தேடினேன்
மிகநயம் குகமயம் ஜெகமகாபதி
விஞ்சைமந்திரஞ் சொல் ரஞ்சிதன் (தி)

சரணம்

மயிலாடுமாமலை ஒயிலாகவேங்கலை
மங்களமிலங்குங்குகைக் கோவிலைக்கண்டு
ஜெபமேவுசேந்தனை தெய்வானை காந்தனை
க்ஷேமாவின்கோமா நன்னேமாவென்றே
திருவுளங்கருணைகொள் ளருணகிரிமொழி
செந்தமிழ்ச்சிறந்திடுங் கிளி (தி)

மோக்ஷாதிபாதமே மோனப்ரசாதமே
முந்தவேகண்டார்பவம் போங்காதமே பக்தி
ஆச்சாரமேன்மையே அத்வீதபான்மையே
அன்பாயெந்தன் பால்க்கந்தன் பார்க்கவே
அஞ்சலி செஞ்சரண் தஞ்சமே கதி
அற்புதப்பண் சத்திவேல் துதி (தி)

---

பஞைகைஸிபகார்—என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான்தோடி—தாளம் ஆதி

பல்லவி

காங்கேயன் காக்ஷிதரும்பேட்டி கண்டார்க்குக்
கனப்ரபலங் காட்டி.

அநுபல்லவி

மாங்குயிலனைய சீமா ட்டி தெய்வானை
வள்ளிமணங்கு ட்டி (கா)

தொஹையரா

கழுகாசலத்திலே கண்கண்ட தெய்வமே
கலியுகக் கந்தசாமி
மழுமானணிந்தவன் மகனாக வந்தவன்
மாமயில் நடத்துநேமி

பாட்டு.

மருக்கடம்பா ரமணி தோளான் திருப்பரங்
கிரிக்குளுறை தா ளான்
திருக்கலியாணத்தின நா ளான் விருப்பிலார்
சேவைமுறை கே ளான் (கா)

தொகையறா

அருணகிரி செந்தமிழ்க்கன் புற்றுமுன்வந்த
ஆறுமுகமான நாதன்
தருணஞதி செய்கின்ற நக்கீரனுக்குவே
தாளத்தை வென்ற நீதன்

பாட்டு

சமரசன் சத்திவேல்ப்பாக்யன்
குமரவேள் நித்ய மகிழ்வாக்யன் (கா)

---

இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் யேகம்

பல்லவி

நாதரவா தெய்வானை (நா)
நந்தாபாதர விந்தாருதர (நா)

அநுபல்லவி

வேதாம்ச மோருருவாய்
விளங்கச்செய்தாய் குருவாய்
வேம்பணிந்தருள் சுந்தரன்காதினில்த்
தாம்பிரணவ மந்திரமோதிய (நா)

தொகையறா

வீரசோழியமன்றாகச்சிக்களித்திட்ட
வேலாயுதக்கடவுளே
விகசிதாயுகவரதகுகதெய்வமே யென்று
வேண்டினேன் சுகமதருளே

சரணம்

வித்வமேலோங்குஞ் சங்கம்
விற்பனர்கொண்டாடுந் தங்கம்
வேந்தருந்திகழ்வித்திமிகுந்த்வாத
சாந்தமேபுகழ் சத்திவேலன்கீதே (கா)

---

## பழநி தண்டபாணி தோத்திரம்.

சேந்திமாநகர் வாழ்—என்ற சிந்துமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி—தாளம் சாப்பு

கண்ணிகள்.

தண்டபாணியுந்தன் தொண்டனானஎந்தன்
சஞ்சலந்தீர் கந்தனே தெய்வ
குஞ்சரத்தின் சொந்தனே வேட
வஞ்சிமோகப் பந்தனே மாறித்
தாண்டவம்புரிந்த ஆண்டவன்மகிழ்ந்த
சாம்பவிக்கு மைந்தனே (தண்)

அண்டராதி துன்பங்கண்டபோதிலின்ப
மன்றுதந்த நண்பனே கங்கைக்
குன்றுருங்க டம்பனே அன்பர்க்
கென்றுமெய்யு டம்பனே கும
ராண்டியாகக்கனி வேண்டித்தென்பழநி
யாளவந்த விம்பனே (தண்)

கந்தமேவழங்குஞ் சிந்துமேமுழங்குங்
கற்பூரச்செந் தீபமே ஜோதி
யற்புதங்கொள் தூபமே மிக்க
நற்பதப்ர தாபமே கொண்ட
கார்த்திகாவுன் காக்ஷி நேர்த்தியான மாக்ஷி
காணும்பாக்ய லாபமே (தண்)

சந்ததங்கனிந்த சிந்தைகொண்டுனன்பர்
சங்கநாத கீதமே வரை
யெங்குமோது வேதமே போகர்
தங்குசாது பாதமே காணச்
சாந்தமாகத்தேடி மாந்தராதிகோடி
சாருவார்கள் நீதமே (தண்)

செங்கண்மால்மகிழ்ந்த தங்கமென்னனந்த
ஜென்மசாபல்யா திகா ருண்ய
நன்மைசேரவந் துகா திவ்ய
சின்மயானந்தா சுகா தேவ
சேவகாமயூர மேவுதீரசூர
சேவலாசுதே சிகா (தண்)

சங்கமுத்தமிழ்க்குச் சிங்கமெய்ப்புகழ்க்குச்
சத்திவேலன் கீர்த்தியே வுன்ப
தத்தயான பூர்த்தியே செய்து
சித்தியான நேர்த்தியே சர்வ
சாக்ஷியானநின் கடாக்ஷவாழ்வுபொங்கத்
தருமெஞ்ஞான மூர்த்தியே. (தண்)

---

காக்ஷியாய் விளங்கு—மென்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி தாளம்—யேகம்.

மாக்ஷிமைக்கங்காளன் மைந்தா
மங்களசுபாங்க சொந்தா
கங்கணராஜாங்க முந்தா கார்த்திகா (மா).

தொஹையரா.

ஆக்ஷிவிஞ்சைலாவண்யா
சோடசகற்பூரக்கெண்யா

பாட்டு.

தீக்ஷண்யகுண செம்பொற்சரண்யா
திவ்யகீதந் தந்திடுஞ்சுப்ரமண்யா (மா)

தொஹையரா.

முறை யேமுகாரி
முதலை சம்ஹாரி

பாட்டு.

நிறையும் வாஞ்சைமருகநேரில்
நீவரந்தருவாயிப் பாரில (மா)

தொஹையரா.

கஜானன் சோதரா
சுண்பார்க்ருபாகரா

பாட்டு.

குஜதடாக ஜெனனகுமரா
குழந்தையென்னுளம் விளேந்ததற்பரா (மா)

தொஹையரா.

தேவேந்த்ர ராஜ்ஜியம்
ஸ்ரீமானுன்னுலேஜெயம்

பாட்டு.

கோவேமகிமைச்சத்திவேல்பாத்யம்
கோஷ்டிமுத்தமிழ்த்தாஷ்டிகச்சுயம் (மா)

---

அப்பனுலாயமனுவா—யென்ற மெட்டு
இராகம் பார்வி தோடி—தாளம் ஏகம்

தொஹையரா கண்ணிகள்.

தெய்வ குஞ்சரிமோகக்குமரா
வனக் குறவர்மகளே மருவுமமரா (கு)

ரஞ்சிதப்பொற்பதனே
திரு நடமிடுமயிலுடையகுகனே (கு)

தொஹையரா

நாதா யென்னோடின்னமேனிந்தச் சூது
நாளேக்கழிப்பது மேழைக்கொவ்வா து
வேதாம்ச ரூபா விரைவாயிப்போ து
வேண்டுவரந்தரவா நீ தப்பா து

பாட்டு

விரும்பினேன் முருகா
அதி விகசிதமுர ஹரியின் மருகா (கு)

தொஹையரா

கீரனருணகிரிக்காய் முன்னா ளே
கேட்டவரந்தந்தஸ்ரேஷ்டாவின்னா ளே
பாரோரறிந்திடவேகந்த வேளே
பாதெரிசனம்பார்க்கநன் னாளே

பாட்டு

பரப்ரம சொரூபா
வுனைப் பணியுஞ் சத்திவேலணியுஞ் சங்கீதக் (கு)

---

(விருத்தம்)

காலையிலெழுந்துனது தென்பரங்கிரிதனைக்
கைதொழுவதெனதுவேலை
கனசந்தியாவந்தனுதிதிருநீற்றைக்
கனிந்திடுவதெனதுவேலை

பாலைதிகழ்பைங்கடம்பா. குருபராவென
வழுத்துவது மெனதுவேலை
மயிலுக்குநின்சரத்தயிலுக்குமனமுருக
வாழ்த்துவது மெனதுவேலை
வாலையபிராமிகௌமாரிமாதங்கிசுத
வாவென்பதெனதுவேலை
வரதமுகிலேவுனதுவிரதமகிமைத்திற
வழங்குவதுமெனதுவேலை
சோலைமலைமேவுகுமராமுராரிமருகா திகிரிமால்
சுப்ரமண்யக்கடவுளே
சொற்பனத்திலுமுனது சிற்பியர்க்கெழுதரிய
சொற்பொருட்சொரூபமருளே.

---

விகசித புட்ப—மென்ற மெட்டு.

செஞ்சுருட்டி-இராகம் தாளம்-ஆதி.

மகுடக்கண்ணிகள்.

சரவணமொய்த்ததடாக மூலா
தமிழ்மறைவித்வசகாய வேலா
தடகுவடுகிடுகிடெனவருமயில்மிசை
தரிசனமுதவுபவானிபாலா
சந்த சிந்து கந்த பூஜை
சந்திகண்ட னந்தவோசை
ஜதிமுழங்கு நிதிவழங்கு
துதிவிளங்கு மதிபுளங்கொள் (ச)

கலசமுனிக்குபதேச பாதா
கமழ்செய்கடப்பந்தார் விநோதா

கபடரிஷிகுறவர் மகடனைமணமுறக்
கழரியமொழிகொடு சாமிநாதா

காட்டில்வேடர் கூட்டமாக
வேட்டையாடல் கேட்டபோது

காங்கேயாநீ வேங்கைமரப்
பாங்குடனே வோங்கிநின்ற (ச)

கழுகுமலைக்கதிர்காமநாடா
கடிமலர்பழமுதிர்சோலைவீடா

கவலைபிணிகளொருதிவலையிலா தருள்செய்
ககனர்கள்பணிமுருகாவிசேடா

கஞ்சமஞ்சிடும்ப தங்கள்
தஞ்சமென்றேன் விஞ்சைமந்த்ர

காக்ஷிசத்திவேல்க்கருளு
மாக்ஷிமுத்திமார்க்கருளும் (சா)

---

பாரடிமடமானே என்ற புதிய மெட்டு

இராகம் பியாக்—தாளம் ஆதி

கண்ணிகள்

காரணவடி வேலா வுன்காக்ஷி
கண்யபதவிமேலா னமாக்ஷி
வாரணத்திர்க்குப் பின்பு
வந்தகுருவுன் னன்பு
பூரணவருள் தாதா பொற்பாதா
பூஜைவசப்ர சாதா நற்போதா (கா)

சஷ்டிவிரத லாபா
தையல்வள்ளிசல் லாபா
சஷ்டநிக்ரக வாக்குச் செய்வாயே
கருணைக்கண்ணுலே நோக்கு மெய்நீயே (கா)
சிற்றம்பலன் குமாரா
சேவற்கொடிக் குபேரா
நெற்றிக்கண்ணுவ தாரா சிங்காரா
நிஷ்களஜெய தீரா லங்காரா (கா)

காந்தப்புராண த்யாக
கச்சியப்பருக் காக
பாந்தச்சன்யாசி யாகி இலக்கணம்
பைரங்கமாக யேகிச் சொலக்கணம் (க)

சங்கப்புலவன் கீரன்
தானென்றவகங் காரன்
தங்குமுத்திக்ரு பாலா சண்காஞஞ்
செங்கரச்சத்தி வேலா விண்தோனுங் (கா)

---

நகடாக் கோனி என்ற மெட்டு
இராகம் தேசிகதோடி—தாளம் ஆதி
தொஹையராக் கண்ணிகள்
தேடித்தேடிக்கோடானுகோடி
பாடிக்கொண்டாடினேன்தெ ரிந்ததே (தே)
வேடிக்கைபார்த்திடாதே பாபம்
வேண்டாமிதனுலென்ன லாபம் (வே)
சத்திவேலாயுதா வுந்தன்ப்ரதாபம் (தே)
(தொஹையரா)
தேவ சாக்ஷியே
சித்தாந்தமாக்ஷியே வள்ளி
தெய்வானை மாமயிலில்க்காக்ஷியே (தே)

---

## சுபசேம மங்கள வாழ்த்து

இராகம் சக்ரபாகம்—தாளம் ஆதி

பல்லவி

தேனுபி ஷேககுமரன்
திவ்யகீர்த்தி மங்களம் (தே)

அநுபல்லவி

சேனாதிபத்ய கவசன்
சிங்காரன் சேவற் றுவஜன் (தே)

சரணம்

ப்ரைக்யாத மிகுசெந்தூர்க்கும்
பெம்மானுர்கடப்பந் தார்க்கும் (தே)

மாவீரபாகனுர்க் கும்
வள்ளிதெய்வானையார்க்கும் (தே)

சந்தானன் சுத்திவேலன்
தாதாசௌபாக்ய சீலன் (தே)

### வாழி

செந்தூரன்வாழி தெய்வானையும் வள்ளியுஞ்சேவலும் வே
லுங்கோதைமாமயிலும் வாழி வாழியுலகமெல்லாந்
தந்தார் சிதம்பரமால் கிர்ஷ்ணபிள்ளையுஞ் சந்ததியும்
வந்தாள் கடம்பன் தமிழ்ப்பஜனாமிர்தம் வாழிய வே.

சத்திவேலாச்சாரியாரவர்களியற்றிய
குமரக்கடவுள் பஜனாமிர்தம்
முற்றிற்று.

194339
சென்னை-600 013

அச்சிலிருக்கிறது • எதிர்பாருங்கள்

கூடிய சீக்கிரம் வெளிவரும்

**மதுரை இராஜபார்ட்**

சபாரஞ்சிதமகா-ள-ள-ஸ்ரீ

# R. V. சத்திவேலாச்சாரியாரவர்கள்

புதிய வர்னமெட்டுகளால் பாடியது

எனதையன்மீர்:—தற்கால நாகரீக வர்னமெட்டுகளும் ஙிங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு இடத்திற்குத் தகுந்த சொற்சுவை சந்தங்களும் பாடி ஆனந்திக்கும் நவரச மமைந்த திருப்புகழ் சந்தம், காவடிச்சிந்தின் சந்தம், ஹிந்துஸ்தான கெஜல், டோமரி, தில்லாணு, இங்கிலீஷ் நோட் இவைகட்குப் பதிலாக இயற்றிய பல பாடல்கள மைந்த சரித்திரங்களாவன.

| | |
|---|---|
| . வள்ளி சரித்திரம் | 7. தாராசசாங்கம் |
| 2. அல்லியரசாணி சரித்திரம் | 8. மயானகாண்டம் |
| 3. குசேலபைகாவலி சரித்திரம் | 9. சதாரம் சரித்திரம் |
| . நல்லதங்காள் சரித்திரம் | 10. துரோபதைவஸ்திராபரண |
| . இலங்காதகனம் | 11. கோவிலன் சரித்திரம் (ம் |
| . கீசக சம்மாரம் | 12. சாரங்கன் சரித்திரம் |

மேற்கண்ட 12-சரித்திரங்கள் தனித்தனியாகவும் அவ் வாறு சரித்திரங்களாக 2-வாலியமாகவும் 12-சரித்திரமும் ஒரே பயிண்டாகவும் பயிண்டுசெய்து விற்கக்கூடும்.

## புதிதாக வெளிவந்திருக்கும்
## பக்திரஸ கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமி கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வரஞ்சிதமெனும் பக்திரஸகீர்த்தனம் முதற்பாகம் விலை ரூ .... 0—5—0

ஷை இரண்டாம்பாகம் .... .... 0—5—0

செட்டிநகர் வித்வான் இராமசாமிக்கவிராயர் அவர்களியற்றிய பக்திரஸகீதாமிர்தம் .... 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன் சண்முகனார் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரஸக்கீர்த்தனம் .... 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V. சத்திவேலாச்சாரியார் அவர்கள் இயற்றிய குமாரக்கடவுள் பஜனாமிர்தம் புதிதாக வெளிவந்தது .... 0—6—0

ஷையாரியற்றிய ஷை பஜனாமிர்தம் இரண்டாம் பாகம் அச்சிலிருக்கிறது சீக்கிரம் வந்துவிடும் 0—6—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாக்ஷி பிள்ளை இயற்றிய விநோத பரமானந்த கீர்த்தனம் .... 0—5—0

**மு. கிருஷ்ண பிள்ளை,**

பி. நா. சி. ஏஜண்ட்,

புத்தக ஷாப் மதுரை.